DINAMANI-06-JUL-2019

# துறையூர் அருகே நாளை மரப்பயிர் சாகுபடி கருத்தரங்கு

திருச்சி, ஜூலை 5: ஈஷா வேளாண் காடுகள் திட்டம் சார்பில், துறையூர் அருகே 150 ஏக்கர் பரப்பளவு கொண்ட லிட்டில் ஊட்டி என்ற வேளாண் காட்டில் மரப்பயிர் சாகுபடி கருத்தரங்கு மற்றும் களப் பயிற்சி ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 7) நடைபெறுகிறது.

இதுகுறித்து ஈஷா வேளாண் காடுகள் திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன், செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியது:

பருவநிலை மாற்றம், வறட்சி, வேலை ஆள் பற்றாகுறை உள்ளிட்ட பிரச்னைகளால் தமிழக விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகிவருகின்றனர். இப்பாதிப்பில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக, மரப்பயிர் சாகுபடி மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பணிகளை ஈஷா வேளாண் காடுகள் திட்டம் செய்துவருகிறது. குறைந்தபட்சம், 1 ஏக்கருக்கு மேல் மரப்பயிர்களை நட விரும்பும் விவசாயிகளுக்கு அவர்களின் நிலத்துக்கே நேரடியாகச் சென்று, ஆய்வு செய்து இலவச ஆலோசனைகள் வழங்கி வருகிறோம். 2004-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் சுமார் 70,000 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். தற்போது 1,500 விவசாயிகளை மாதிரி விவசாயிகளாக மாற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.



திருச்சியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கிறார் ஈஷா வேளாண் காடுகள் திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன். உடன் (இடமிருந்து) முன்னோடி மரப் பயிர் விவசாயி கனகராஜ், மருத்துவர் துரைசாமி, ஈஷா பசுமைக் கரங்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுவாமி ஸ்ரீமுகா.

இந்நிலையில், துறையூர் வட்டத்தில் காஞ்சேரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள மருத்துவர் துரைசாமி என்பவரது வேளாண் காட்டில் மரப்பயிர் சாகுபடி கருத்தரங்கு மற்றும் களப்பயிற்சியை ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளோம். காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஏற்பாடு செய்துள்ளோம். இதில் தமிழகம் முழுவதும் இருந்து 1,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்க உள்ளனர். இந்தக் கருத்தரங்கில் முன்னோடி மரப் பயிர் விவசாயிகள் பலர் பங்கேற்று தங்களின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் வழங்க உள்ளனர்.

இக்கருத்தரங்கு மற்றும் களப் பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 94425 90079, 94425 90068 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

பேட்டியின்போது, ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் சுவாமி ஸ்ரீமுகா, லிட்டில் ஊட்டி வேளாண் காட்டின் உரிமையாளர் மருத்துவர் துரைசாமி, தஞ்சாவூர் முன்னோடி மரப் பயிர் விவசாயி கனகராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.